செ.வெ.எண்: 543/2016 நாள்: 18.08.2016

## பத்திரிக்கை செய்தி

தமிழக அரசின் தொழில் முனைவோர் மேம்பாட்டு பயிற்சி நிறுவனம், சென்னை, ஏற்றுமதி இறக்குமதி வழிமுறைகள், சட்டதிட்டங்கள் பற்றிய 3 நாள் பயிற்சியினை வரும் ஆகஸ்டு 26 முதல் ஆகஸ்டு 28 வரை தூத்துக்குடியில் உள்ள தூத்துக்குடி மாவட்ட குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில்கள் சங்கம் (THUDITTSIA), 1/158, ராம் நகர், எட்டயபுரம் ரோடு, தூத்துகுடி 628 002ல் நடத்தவுள்ளது.

உலகமயமாக்கலின் விளைவாக, ஏற்றுமதிவர்த்தகத்திற்கான வாய்ப்புகள் அதிகரித்துள்ளன. இப்பயிற்சியில் ஏற்றுமதி சந்தையின் தேவை, கொள்முதலுக்கான வாய்ப்புக்கள், பொருளை பதப்படுத்துதல், சீரிய முறையில் பாக்கிங் செய்தல், அரசின் சட்டதிட்டங்கள். வங்கி நடைமுறைகள், அந்நிய செலாவணியின் மாற்றுவிகிதங்கள், காப்பீடு குறித்த தகவல்கள், பொருளை இறக்குமதி செய்பவரின் பின்னனி, அவர் நாட்டின் பொருளாதாரநிலை போன்ற தகவல்கள் பயிற்றுவிக்கப்படும், மேலும், இப்பயிற்சியில் நிதி உதவிகள் பற்றிய ஆலோசனைகளும், அரசு வழங்கும் உதவிகள் மற்றும் மானியங்கள் ஆகியவையும் விவாதிக்கப்படும்.

18 வயது நிரம்பிய ஆண், பெண் இருபாலரும் சேரலாம். இப்பயிற்சிக்கான கட்டணம் ரூபாய் 3500 ஆகும். இப்பயிற்சிக்கான பதிவிற்கும் மற்றும் கூடுதல் விவரங்களுக்கும் தொடர்புக்கொள்ள வேண்டிய THUDITTSIA தொலைபேசி 0461-2347005, கைபேசி எண்கள் 9840158943 மற்றும் EDI சென்னை, தொலைபேசி எண்கள் 044-22252081/82 ஆகும்.

ஏற்றுமதி வர்த்தகம் குறித்து பயிற்சி பெற விருப்பமுடையவர்கள் மேற்கண்ட தொலைபேசியில் தொடர்பு கொண்டு பயிற்சி பெற்று பயன்பெற மாவட்ட ஆட்சித்தலைவர் கேட்டுக்கொள்கிறார்.

**மாவட்ட ஆட்சித்தலைவர்**
**கன்னியாகுமரி மாவட்டம்**
**நாகர்கோவில்**

---

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கன்னியாகுமரி மாவட்டம்.